செய்தி வெளியீடு எண்:038 நாள் : 18.01.2014

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் சென்னையில் நடைபெற உள்ள இரு நாட்டு மீனவர்களின் கூட்டம் தொடர்பாக, தமிழக அரசின் மீன்வளத்துறை செயலாளர் மைய அரசிலுள்ள அதிகாரிகளுடன் 10.1.2014 அன்று விவாதித்தார். அப்போது இரு நாட்டு மீனவர்களின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு இலங்கை சிறைகளில் இருக்கும் மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களை 13.1.2014 முதல் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்குமென தெரிவித்த மத்திய அரசு, தமிழக சிறையில் அடைக்கப்பட்டுள்ள 179 இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டது. அதன்படி, தமிழக சிறையிலுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை துவக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.1.2014 அன்று உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொடர் முயற்சியின் காரணமாக இதுவரை 151 தமிழக மீனவர்களும், காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 22 மீனவர்களும் இலங்கை சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று, இதுவரை, தமிழக சிறையில் இருந்து 113 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதன் தொடர் நிகழ்வாக இன்று (18.1.2014) மதியம் இலங்கையிலுள்ள மல்லாகம் நீதிமன்றம் 60 தமிழக மீனவர்களையும், 15 படகுகளையும் விடுவித்து ஆணை பிறப்பித்துள்ளது. அதேபோன்று, தமிழக சிறையிலுள்ள 17 இலங்கை மீனவர்களும் 7 படகுகளும் விடுவிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 13.1.2014 முதல் இன்று வரை இலங்கைச் சிறையிலிருந்து 211 தமிழக மீனவர்களும், காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 22 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

நாள்:- 18.1.2014.